பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

13 04 2024 **SATURDAY** 6 45 **AM**

வணக்கம். மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தமிழகத்தின் வளர்ச்சியில் திமுக மற்றும் அஇஅதிமுக கவனம் செலுத்தவில்லை என பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.
- பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தமிழகத்தின் நலனில் அக்கறை காட்டவில்லை என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி கூறியுள்ளார்.
- தமிழகத்தில் திமுக ஆட்சியில் விலைவாசி உயர்வால் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் வாக்குச்சாவடி சீட்டு விநியோகிக்கும் பணி இன்று நிறைவடையும் என மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ கூறியுள்ளார்.
- ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

>>>><<<<

தமிழகத்தின் வளர்ச்சியில் திமுக மற்றும் அஇஅதிமுக கவனம் செலுத்தவில்லை என பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரையில் வாகனப் பேரணியில் பங்கேற்ற பின் பேசிய அவர், திமுக மற்றும் அஇஅதிமுக ஆட்சியில் நடைபெற்ற ஊழல்களால் மாநிலம் வளர்ச்சியடையவில்லை என்றார்.

தமிழ்மொழி மற்றும் தமிழகத்தின் வளர்ச்சியில் பிஜேபி அதிக அக்கறை கொண்டுள்ளதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

இதனிடையே, தஞ்சாவூரில் பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி மூத்த தலைவர் திருமதி. நிர்மலா சீதாராமன், தமிழகத்தில் திமுக ஆட்சியில் போதைப் பொருள் புழக்கம் அதிகரித்தள்ளதாக கூறினார்.

கச்சத்தீவு பிரச்சினைக்கு திமுக மற்றும் காங்கிரஸ் கட்சிகளே காரணம் என்று அவர் தெரிவித்தார்.

அதன் காரணமாகவே மீனவர்கள் பிரச்சினை தொடர்வதாக திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>><<<<

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தமிழகத்தின் நலனில் அக்கறை காட்டவில்லை என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், ஒற்றை கலாச்சாரம் - ஒற்றை மொழி என்பதே பிஜேபியின் கொள்கையாக உள்ளது என்றார்.

**INDI** கூட்டணி ஆட்சிக்கு வந்தால், நீட் தேர்வு தொடர்பாக அந்தந்த மாநிலங்களே தீர்மானிக்க வகை செய்யப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

இக்கூட்டத்தில் பேசிய திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின், அஇஅதிமுகவும், பிஜேபியும் தமிழக மக்களின் நலனுக்கு எதிராக செயல்படுவதாக கூறினார்.

கடந்த 3 ஆண்டுகளில் மாநில அரசின் நலத்திட்டங்கள் மூலம் அனைத்து தரப்பு மக்களும் பயனடைந்து வருவதாக திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில் திமுக ஆட்சியில் விலைவாசி உயர்வால் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலத்தில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மின்கட்டண உயர்வு, சொத்து வரி உயர்வு போன்றவற்றால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

திமுகவைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர்கள், தமிழக நலன் சார்ந்த விஷயங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

இதனிடையே, திண்டுக்கல்லில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த், மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அஇஅதிமுக – தேமுதிக கூட்டணி குரல் கொடுக்கும் என்றார்.

>>>><<<<

தமிழகத்தில் வாக்குச்சாவடி சீட்டு விநியோகிக்கும் பணி இன்று நிறைவடையும் என மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் உள்ள 6 கோடியே 23 லட்சம் வாக்காளர்களுக்கும், வாக்குச்சாவடி சீட்டுகள் விநியோகிக்கப்படும் என்றார்.

ஏற்கனவே, 70 சதவீதத்திற்கும் அதிகமான வாக்காளர்களுக்கு இந்த சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்த்தவர்களுக்கு விரைவு தபால் சேவை மூலம் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அனுப்பி வைக்கப்படும் என்று திரு. சத்யபிரத சாஹூ தெரிவித்தார்.

>>>><<<<

இனி தேர்தல் களம்,

தொகுதி வாரியாக எமது செய்தியாளர்கள் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது தென்காசி மக்களவைத் தொகுதி

*(வாய்ஸ் பைட் - செந்தில் – 92 செகண்ட்ஸ்)*

>>>><<<<

நாடு முழுவதும் முதல் முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்திலும் இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்முறை வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிப்பது தங்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளிப்பதாக தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - இளம் வாக்காளர்கள்) – 37 செகண்ட்ஸ்)*

>>>><<<<

அரியலூர் பகுதியில் சுற்றித்திரியும் சிறுத்தையை பிடிக்க வனத்துறை தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

3 கூண்டுகள் வைக்கப்பட்டு, 22 இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு சிறுத்தையை பிடிக்கும் பணி நடைபெறுவதாக மாவட்ட வன அலுவலர் திரு. இளங்கோவன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - இளங்கோவன் 50 செகண்ட்ஸ்)

>>>><<<<

தமிழகத்தில் ஒருசில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நேற்று பரவலாக மழை பெய்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சம் எழுந்துள்ள நிலையில் மேற்கு ஆசிய நாடுகள் நிதானத்தைக் கடைபிடிக்குமாறு ரஷ்யா, ஜெர்மனி மற்றும் பிரிட்டன் நாடுகள் கேட்டுக் கொண்டுள்ளன.

>>>><<<<

வைசாகி, விஷு, பிஷுப், வைஷாகாடி மற்றும் தமிழ்ப் புத்தாண்டு பண்டிகைகள் இன்றும் நாளையும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்படுவதையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

>>>><<<<

சில்லறை பணவீக்கம் மார்ச் மாதத்தில் 4 புள்ளி எட்டு ஐந்து சதவீதமாகக் குறைந்துள்ளதாக புள்ளியியல் அமைச்சகம் கூறியுள்ளது.

>>>><<<<

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தேனி மற்றும் இடுக்கி மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் இரு மாநில எல்லையில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்வது குறித்த கூட்டம் கம்பத்தில் நடைபெற்றது.

>>>><<<<

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் அருகே வாகன சோதனையின்போது, உரிய ஆவணங்கள் இன்றி காரில் கொண்டு செல்லப்பட்ட 2 கோடியே 83 லட்சம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

>>>><<<<

மக்களவைத் தேர்தலில் மக்கள் அச்சமின்றி வாக்களிக்கவும் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாகவும் காவல்துறையினர் மற்றும் துணை ராணுவ படையினரின் கொடி அணிவகுப்பு திருப்பத்தூரில் நடைபெற்றது.

>>>><<<<

சென்னையில் வாக்குச் சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பு 16 மையங்களில் இன்று நடைபெறவுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரியும் மாநகராட்சி ஆணையருமான திரு ஜெ ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

>>>><<<<

விளையாட்டுச் செய்தி

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

லக்னோவில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், முதலில் பேட் செய்த லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 167 ரன் எடுத்தது.

168 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தில்லி அணி 18 புள்ளி ஒரு ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 170 ரன் எடுத்து, இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

மொகாலியில் இன்று இரவு நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் அணி - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

>>>><<<<